www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ம் நாள் சாட்சியாகிய வெங்கடேசன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி.சரஸ்வதி இளநிலை உதவியாளர், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | வயது | 35 |
| த/பெ | பொன்னுராஜ் | இனம் | ஆண் |
| கிராமம் | காஞ்சிபுரம் | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| சமயம் | | தாலுக்கா | |

**CC.No.188/2019**

**மனுவின் பேரில் அழைத்து 1 முதல் 7, 9 முதல் 16 எதிரிகள் தரப்பில் விசாரணை 23.01.2023 அ.சா.2**

1. தயாரிப்பு அறிக்கையை என்னிடம்தான் கொடுப்பார்கள் என்றால் ஆமாம். நான் அதற்கு அத்தாட்சி கொடுப்பேனா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று தயாரிப்பு அறிக்கையை எதிரிகள் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. 4.9.2018ம் தேதி எதிரிகள் மற்றும் மற்ற தொழிலாளிகள் போராட்டம் செய்தபோது நான் கம்பெனிக்குள் இருந்தேனா என்றால் ஆமாம். பிற ஊழியர்களும் உள்ளே இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

2. தயாரிப்பு மேலாளர் என்பதன் அடிப்படையில் சிஎன்சி மிஷின் எப்படி வேலைசெய்யும் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். நானும் மிஷினை இயக்குவேன். மிஷினை இயக்குவதற்கு எனக்கு அனுமதி உண்டு என்றால் சரிதான். எதிரிகள் வேலை செய்த மிஷின்களை இயக்குவதற்கு எனக்கு அனுமதி உண்டு என்றால் சரிதான். வேறு ஊழியர்களுக்கு மிஷின்களை இயக்க அனுமதி உண்டா என்றால் இல்லை. எனக்கு மட்டும்தான் உண்டு.

மறு விசாரணை ;இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/-K.Ramkumar,
Judicial Magistrate,
Sriperumbudur.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-5.pdf